முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 633**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.06.2021, புதன்கிழமை

1. சன்மார்க்க நெறி கொண்ட அரங்கா வாழ்க
சற்குருவாய் வாழுகின்ற தேசிகா வாழ்க
உன்மார்க்கம் இந்த உலகை வெல்லும் எனக்கூறி
ஓங்காரன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை பிலவ மிதுன திங்களில்
அருளுவேன் அரங்கஞானி நீ கேட்க
கேட்கவே அரங்கன் சக்திகொண்டு இந்த கலியுகத்தில்
குறையில்லாத ஞானயுகமாற்றத்தை ஆறுமுகன்யான் நடத்திஅருள்வேன்
3. தடையின்றி சன்மார்க்கம் உலகமெங்கும் தழைக்க
சகலருக்கும் பிறவா பெரும்பேர் எனும் ஞானம்
இலகுவாகக் கிட்டி உலகமெங்கிலும்
ஈடுஇணையில்லாத ஆறுமுகன் என் பலம் சிறப்பாகும்
4. ஆகவே அரங்கன் வழி இந்த அதிசயத்தை அகிலத்தார் அடைந்து மகிழ நேரும்
யுகம்யுகமாய் அரங்கன்செய்த தவத்திற்கு உண்மைபட ஆறுமுகன்யான் இந்த கலியுகத்தில்
மிகையான ஆசிதந்து உலகமாற்றத்தை
மண்ணுலகில் அரங்கன் வழி யான் நடத்தி அருள்வேன்
5. அருளாக அறமாக அரங்கன் உபதேசமாக
ஆறுமுகன் யான் அனைத்துமாக செயல்பட்டுவர
வருகின்ற கலியுகத்தின் மாற்றம்
வாழும் ஞானியான அரங்கன் வழிவழியே நடந்தேறும்
6. நடந்தேற ஞானசபை கூட்டி
நாடெங்கிலும் தொண்டர்படை பெருக்கி
தடையின்றி அரங்கன் இந்த நோக்கம் தரணியில் சித்தியாக
தண்டாயுதன் யான் ஞானமாக அருள்புரிந்து வருகின்றேன்
7. வருகவே உலகமாற்றம் சடுதி
வையகம் அமைதி பாதுகாப்பு பெருகி
முருகப்பெருமான் என் அருளால் மாற்றம் பெறும்
முழுமைபட ஞானயுகமாக தேற்றம் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.